**கவனிக்க.-** *2019.06.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2130 - 2019 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2019.06.28**

*2130 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 120 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 120 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூலை மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

149- B 81536 - 353 (2019/06)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கம்/ப்ர/10886 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு இல. 305/122, வடுவவத்த எனுமிடத்தில் வசிக்கும் பன்னல அப்புஹாமிலாகே மஹிந்த ஹேமசிரி என்பவருக்கு 1990.03.29 ஆந் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம் கம்பஹா மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் - ஆம் இலக்கத்தின்கீழ் - ஆந் திகதி பதிவுசெய்யப்படாத இப்பற்று நிலத்திற்குச் சட்ட முறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ, அல்லது பின்னுரிமையாளர் இருந்தும், அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ, பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், மேற்கு மாகாண சபையின் மஹர பிரதேசச் செயலாளர் ஜீ. எஸ். ஐ. விமலசேன ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட அளிப்புப் பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இந்த நடவடிக்கையை எதிர்த்து ஏதும் ஆட்சேபனை இருந்தால் அதை 2019.08.09 ஆந் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

### அட்டவணை

கம்பஹா நிருவாக மாவட்டத்தின், மஹர பிரதேசச் செயலாளர் பிரிவின் 302 ஏ ஊருவல கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஊருவல கிராமத்தில் அமைந்துள்ளதும், கம்பஹா மாவட்ட அளவையாளர் என அழைக்கப்படுவதும், நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு அளவையியல் அதிகாரசபையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள மு. பீ. கம் 1006 ஆம் இலக்க களத்தாளில் இலக்க வரைபடத்தில் 2 ஆம் இலக்க துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 0.085 பேர்ச் விஸ்தீரண முள்ளதும் கீழ்வரும் எல்லைகளைக்கொண்டதுமான வடுவவத்த அரச காணி.

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 3 மற்றும் 1 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1 மற்றும் பிரவேசிக்கும் வழி;
தெற்கு : பிரவேசிக்கும் வழி ;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 3 மற்றும் பிரவேசிக்கும் வழி.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்,
மஹர.

2019, சனவரி 02.

06-934

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/58261.
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : அம்/நி.இ.கொ./தீ.ப./07/2 (சேனா)

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சேனாநாயக்கபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 280010 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 895 எனக் காட்டப்பட்டுள்ள 0.0159 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை புடவை விற்பனை நிலையம் அமைக்கும் வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. மாபலகம மானகே கமல் அருண ஷாந்த விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எல்லை வரைபடத்தில் காணித்துண்டு இலக்கங்கள் 665 மற்றும் 864;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 864;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 893 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 894 மற்றும் 665.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.05.23 தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2019 ஆம் வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், காணியின் சந்தைப் பெறுமதியில் 2%, 2019 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) மேலதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடவேண்டும். இந்த குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை

திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்துடன் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்;

(ஆ) தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக, விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேசச் செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2019.05.23 ஆந் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் பிரசுரமான தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எல். பி. சாமிகா சுபோதினி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 28.

06-795

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/59082.
தென் மாகாண பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : நிஇகொ/ஹம்/இ2/அம்/தீபது/17.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பலந்தொட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 155 நோனகம கிராம அலுவலர் பிரிவில் வெலிபடன்வில கிராமத்தில் அமைந்துள்ளதும் H/ AMB/ 2017/ 524 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கங்கள் B மற்றும் C எனக் காட்டப்பட்டுள்ளதுமான சுமார் 0.8093 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு பாப் பொலிமக் தனியார் கம்பனி எனும் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

H/ AMB/2017/ 524 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் B

வடக்கு : எப்விபி 467 இல் 438 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் C, F & A;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் D ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் A.

H/ AMB/2017/ 524 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் C

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் B & D ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் E & F;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் E ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் B & F.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.03.27 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2019 ஆம் வருடத்திற்கான காணியின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல்

வேண்டும். 2019 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% கூட்டிக் கொள்ளுதல் வேண்டும்;

தவணைப்பணம்.- அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2019.03.27 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், மாகாண காணி ஆணையாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யு. அயோத்யா எஸ். ஜயவர்தன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 28.

06-796

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/48307.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : பலாத்/இ. கொ/இ9/புத்/தீப. 01

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 618, புத்தளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த புத்தளம் எனும் நகரில் அமைந்துள்ளதும் அரச நில அளவையாளர் டபிள்யு. சி. எம். பிரணாந்து அவர்களின் பு/புத்./2013/30 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் ''அ'' எனக் காட்டப்பட்டுள்ளதும் 00றூட் 37.28 பேர்ச்சஸ் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை சமய வழிபாடு நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு இரட்சண்யக் குரல் முழு செய்தித் தேவஸ்தானத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு:

வடக்கு : 4839 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தின் 58 ஆம் இலக்கக் காணித்துண்டின் ஒரு பகுதி;
கிழக்கு : வீதி ;
தெற்கு : 4839 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தின் 58 ஆம் இலக்கக் காணித்துண்டின் ஒரு பகுதி ;
மேற்கு : 4839 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தின் 58 ஆம் இலக்கக் காணித்துண்டின் ஒரு பகுதி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2019.04.11 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.-** பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2019 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/ 2 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி சமய வழிபாடு நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேசச் செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2019.04.11 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகையை நிறைவுசெய்யும் நோக்கத்திற்கான கீழ் குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதிக்கப்படும் ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் பிரசுரமான தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத் தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 28.

06-797

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/57011.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : பலாத்/இ. கொ/இ9/நவ்/தீ.ப. 084.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெலேவெவ தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வெலேவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள எப். வி. பி. 3216 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1227 இல் காட்டப்பட்டுள்ள 00றூட் 0.0593 ஹெக்டேயார் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை தொடர்பாடல் கோபுரம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் டயலொக் அக்சிடா பி.எல்.சி. விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத் தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இல. 1226 ;
கிழக்கு : காணித்துண்டு இல. 1226, 659 மற்றும் 660 ;
தெற்கு : காணித்துண்டு இல. 660, 661 மற்றும் 1229 ;
மேற்கு : காணித்துண்டு இல. 1229, 1228 மற்றும் 1226.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது (30) வருடங்கள் (2019.01.10 தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை.-** 2019 ஆம் வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை செயற்படுத்தப்படுகின்ற வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்த குத்தகையாகக் கொடுபடவேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20 % கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) தவணைப்பணம்.- அறவிடப்பட மாட்டாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி கட்டிட நிர்மாண உபகரணங்கள் மற்றும் பதனிடப்படாத காங்கிரீட் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேசச் செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2019.01.10 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் பிரசுரமான தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத் தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 28.

06-839

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.